ஒத்தியல்பு மதிப்பீட்டுக்கான இலங்கை தராதர அங்கீகார சபை
வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

ஆட்சேர்ப்பு அறிவித்தல்

ஒத்தியல்பு மதிப்பீட்டுக்கான இலங்கை தராதர அங்கீகார சபையில் (SLAB) பின்வரும் பதவிகளுக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவிப் பணிப்பாளர் (மதிப்பளிப்பு) – 05 பதவிகள்
2. உதவிப் பணிப்பாளர் (நிதி) – 01 பதவி
3. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது) – 01 பதவி

பதவி	தேவையான அடிப்படை தகைமைகள்
உதவிப் பணிப்பாளர் (மதிப்பளிப்பு)	**வெளிவாரி அபேட்சகர்கள்:** 1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம்/ மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம்/ பொறியியல் துறையில் இளமாணிப் பட்டம் **மற்றும்** முதல் பட்டத்தை பெற்ற பின் அரச சேவை, கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் மதிப்பளிப்பு, இணக்க மதிப்பீடு, முறைமைகள் கணக்காய்வு மற்றும் தொடர்புடைய செயற்பாடுகளின் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம். **உள்ளக அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)** 1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களினால் தேவைப்படும் தகைமைகளை பெற்றிருத்தல். 2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் கனிஷ்ட முகாமையாளர் (JM 1-1) பிரிவு பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.
உதவிப் பணிப்பாளர் (நிதி)	**வெளிவாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2):** 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிதி, கணக்கியல், நிதி முகாமைத்துவம், வர்த்தக நிர்வாகம், வர்த்தக முகாமைத்துவம், வர்த்தகம் அல்லது மற்றொரு தொடர்புடைய பட்டம். **மற்றும்** வர்த்தகம் அல்லது வணிக அமைப்புகள், கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக அமைப்பு ஒன்றில் பட்டம் பெற்ற பின்னர் குறைந்தது ஓர் (1) ஆண்டு தொடர்புடைய வேலை அனுபவம். தொடர்புடைய விடயப்பரப்பு ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல். **மற்றும்** பரீட்சையில் சித்தி பெற்ற பின் குறைந்தது ஓர் (1) ஆண்டு தொடர்புடைய வேலை அனுபவம். **உள்ளக அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)** 1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களினால் தேவைப்படும் தகைமைகளை பெற்றிருத்தல். 2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் கனிஷ்ட முகாமையாளர் (JM) பிரிவு பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது) – 01 பதவி	**வெளிவாரி அபேட்சகர்கள்:** **கல்வி** 1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் i. சிங்களம்/ தமிழ் ii. ஆங்கில மொழி iii. கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். **மற்றும்** 2. க.பொ.த. (உ/த) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் அல்லது வர்த்தகத்தில் (பொதுப் பரீட்சை தவிர) ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். **மற்றும்** 3. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து கணினி பயன்பாட்டில் 06 மாதங்கள் சான்றிதழ் கற்கை **உள்ளக அபேட்சகர்கள்** பின்வரும் தகைமைகளை பெற்ற ஆரம்ப நிலை – தேர்ச்சி பெற்ற, ஆரம்ப நிலை – பகுதி அளவு தேர்ச்சி பெற்ற மற்றும் ஆரம்ப நிலை – தேர்ச்சி பெறாதவர் பிரிவின் பணியாளர்கள் விண்ணப்பிக்க தகுதி பெறுவர். **கல்வி** **க.பொ.த. (சா/த) பரீட்சையில்** i. சிங்களம்/ தமிழ் ii. ஆங்கில மொழி iii. கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்காக திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல். **மற்றது:** மேலுள்ள தொழிலாளர் பிரிவின் கீழ் நிரந்தர பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். **மற்றும்** அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து கணினி பயன்பாட்டில் 06 மாத சான்றிதழ் கற்கை

அனைத்து தேவையான தகைமைகள் மற்றும் விரிவான அறிவித்தல் மற்றும் விண்ணப்பத்திற்காக www.slab.lk என்ற ஒத்தியல்பு மதிப்பீட்டுக்கான இலங்கை தராதர அங்கீகார சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

விண்ணப்பித்தல்:

- அனைத்து அபேட்சகர்களும் www.slab.lk என்ற எமது உத்தியோகபூர்வ இணையதளத்தின் மூலம் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு கோரப்படுகின்றனர்.
- கூகுள் படிவத்தைப் பூர்த்தி செய்த பின், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் விண்ணப்பதாரரின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும். விலைமனுப்பதாரர் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப் படிவத்தை அச்சிட வேண்டும். தொடர்ந்து, அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, தேவையான அடிப்படை தகைமைகளை சரிபார்க்கும் ஆவணங்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் சேர்த்து கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
- ஒன்லைன் விண்ணப்பம் மற்றும் தபால் மூலம் சமர்ப்பிக்கும் வன் பிரதி இரண்டும் அவசியம் என்பதை கருத்தில் கொள்ளவும்.

  தலைவர்,
  ஒத்தியல்பு மதிப்பீட்டுக்கான இலங்கை தராதர அங்கீகார சபை,
  இல. 44, பிரத்தியேக பொருளாதார நிலையம், நாராஹென்பிட்ட, கொழும்பு 05
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
- போக்குவரத்துச் செலவுகள் மீள் நிரப்பப்படமாட்டாது என்பதை கருத்தில் கொள்ளவும்.
- இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப இறுதித் திகதி –
ஒத்தியல்பு மதிப்பீட்டுக்கான இலங்கை தராதர அங்கீகார சபை,
இல. 44, பிரத்தியேக பொருளாதார நிலையம், கிரிமண்டல மாவத்தை, நாராஹென்பிட்ட, கொழும்பு 05

Gazette.lk